**புதுச்சேரி அரசு, பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டுத்துறை சார்பில் நடைபெறும் "VEER BAAL DIWAS" வீர குழந்தைகள் தின விழாவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் அவர்களின் உரை.**

இடம் - கம்பன் கலை அரங்கம், புதுச்சேரி. தேதி - 26-12-2024

மரியாதைக்குரிய, Chief Minister Rangasamy, Speaker Selvam, Women & Child Development Minister Jayakumar, MLA Anibal Kennedy, Secretary Nedunchezhiyan, District Collector Kulothungan, அதிகாரிகள் மற்றும் நம் எல்லாருடைய அன்புக்கும் பாசத்திற்கும் உரிய குழந்தைகளுக்கு என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். காரணம், குழந்தைகள் எதிர்கால இந்தியாவின் ஒளி விளக்குகள். அவர்களை கௌரவித்து அவர்களுக்கு- தேசபக்தி, தியாகம், வீரம் நிறைந்த வாழ்க்கைக்கு இந்த விழா வழிகாட்டும் என்று நம்புகிறேன்.

இந்த, வீர குழந்தைகள் தினத்தை **"VEER BAAL DIWAS"**- இன்று நாடு முழுவதும் கொண்டாடுகிறோம். மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி இந்த விழாவை முன்னெடுத்து இருக்கிறார்.

'VIKSHIT BHARAT' வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க குழந்தைகள்தான் முக்கிய பங்கு ஆற்றுவார்கள் என்ற

நம்பிக்கையோடு இந்த விழாவை நமக்கு கொடுத்து இருக்கிறார்.

17-ஆம் நூற்றாண்டில், 10-வது சீக்கிய குரு, குரு கோவிந்த் சிங்கின் மகன்கள் நாலு பேரும் அன்றைய அரசருக்கு எதிராக, வீரத்தோடு போராடி, உயிரை தியாகம் செய்ததை நினைவு கூறும் இந்த நாளில், நம்முடைய குழந்தைகளுக்கு வீரம், தேசபக்தி, தியாகம் பற்றி எடுத்துச் சொல்லி, இந்த நாட்டை வளமான நாடாக, பலமான நாடாக, மாற்ற பாடுபட வேண்டும் என்பதை உணர்த்த வேண்டும்.

இந்திய நாடு பல கலாச்சாரங்கள், மதங்கள், இனங்கள் ஒன்றாக சேர்ந்த நாடு. வேற்றுமையில் ஒற்றுமை போற்றும் நாடு. நம்முடைய வரலாறு வீரமும், தியாகமும், தேச பக்தியும், ஒற்றுமையும் நிறைந்தது. இவை எல்லாம் வளரும் தலைமுறைக்கு நாம் எடுத்துச் சொல்ல வேண்டியது நம்முடைய கடமை.

நம்முடைய பண்பாடு, கடவுள், மதங்கள் எல்லாம் தீமைகளுக்கு எதிராக வீரத்தோடு போராட வேண்டும் என்று நமக்கு சொல்லிக் கொடுக்கிறது. இந்த சமுதாயம் மேம்பட, நலம் பெற தியாகம் செய்யும் மன வலிமையை நமக்கு தருகிறது.

நம்முடைய வரலாறு முழுவதிலும் இதை போன்ற, வீரமும் தியாகமும் நிறைந்த வீரர்களை - வீர பெண்மணிகளை நாம் பார்க்க முடியும். வீரம் நிறைந்த தியாகச் சுடர்களின் வரலாறுகளை நாம் நம்முடைய குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லும் போது அவர்கள் நம்முடைய பண்பாட்டின்

பெருமையை புரிந்து கொள்வார்கள். தேசபக்தி உணர்வோடு இந்த நாட்டின் வளர்ச்சிக்கு பாடுபடுவார்கள்.

இதை எல்லாம் நாம் கவனமாக செய்ய வேண்டும். இந்த சமுதாய கடமையில் இருந்து நாம் தவறி விடக்கூடாது என்பதை சொல்லும் விழாவாகதான் நான் இதை பார்க்கிறேன். இப்படி ஒரு விழாவை நமக்குத் தந்த பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கு இந்த நேரத்திலே நம் அனைவரின் சார்பிலும் நன்றியை சொல்லிக் கொள்கிறேன்.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது, ஒவ்வொரு வருடமும் வீர குழந்தைகளை தேர்ந்தெடுத்து அவர்களை கௌரவிப்பார். ஒவ்வொரு குழந்தையோடும் கலந்துரையாடுவார். அதிலிருந்து நான் புரிந்து கொண்டது இதுதான். வீரப் பண்பு என்பது ஒரு நெருக்கடியான காலத்தில் நிர்பந்தம் எற்படும்போது, வெளிப்படுகிறது. இந்த வீரப் பண்பு ஏற்கனவே குழந்தைகளுக்கு உள்ளே படிந்து கிடக்கிறது.

உதாரணமாக, பெருமழை, புயல், பூகம்பம், பள்ளி சுற்றுலாவின்போது சக மாணவர்கள் தண்ணீரில் விழுந்துவிட்டால் அவர்களை காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை, பெரிய தீ விபத்து, சாலை விபத்து இதுபோன்ற சூழ்நிலையில் அங்கு இருக்கும் குழந்தைகளில் 2-3 குழந்தைகள் இந்த வீர பண்பை வெளிப்படுத்துவதை நாம்

பார்க்க முடியும். இந்த குழந்தைகள், பின்னாளில் வாழ்க்கையில் எந்த விதமான நெருக்கடிகள் வந்தாலும் அவற்றை சமாளிக்க கூடிய மன வலிமையை பெற்று விடுகிறார்கள். இது மற்ற குழந்தைகளுக்கும் உதாரணமாக இருக்கும்.

அதிகாரிகள் இதுபோன்ற நிகழ்ச்சிகள் மூலமாக ஒவ்வெரு குழந்தையின் உள்ளே இருக்கும் இந்த வீரப்பன்பை பற்றி மற்ற குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

மத்திய அரசு 2021-ஆம் ஆண்டில் இந்த வீர குழந்தைகள் தினத்தை அறிவித்து இருந்தாலும் புதுச்சேரி மாநிலத்தில் இப்போதுதான் முதல் முறையாக கொண்டாடப்படுகிறது. அதை ஒட்டி, மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் நடத்தப்பட்ட கட்டுரை போட்டி, கதை சொல்லும் போட்டி, ஓவியப் போட்டி, கவிதை போட்டி, பட்டிமன்றம் என்று பல போட்டிகளில் வெற்றி பெற்று பரிசுகள் பெற இங்கே வந்திருக்கும் குழந்தைகள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுச்சேரியில் அரசு நிதி உதவி பெற்று சுமார் 25-க்கும் மேற்பட்ட CHILD CARE INSTITUTIONS இருப்பதாக அறிகிறேன். உங்களுக்கான கடமையும் பொறுப்பும் அதிகம். தாய் தந்தைக்கு இருக்கும் பொறுப்பு உங்களுக்கு தரப்பட்டு இருக்கிறது.

கதைகள் மூலமாக, படங்கள் மூலமாக, உங்களுக்கு தெரிந்த ஆரோக்கியமான வழிகளில் குழந்தைகளுக்கு தைரியத்தை, தன்னம்பிக்கையை, தேசபக்தியை வளர்க்க வேண்டும். இந்த உலகத்தில் அவர்கள் சந்திக்கக்கூடிய சவால்களை கடந்து வரும் மன வலிமையை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அதுதான் எதிர்கால இந்தியாவுக்கு நம்முடைய பங்களிப்பாக இருக்கும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**நன்றி... வணக்கம் !!!**